**O.S. No. 19/2021**

**Date: 13.08.2025**

**வா,சா. 3 கருப்பையா**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

உறுதிக்கூற்றில் நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். நான் விவசாயம் வேலை பார்க்கிறேன். நான் 2ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். கொடுங்கல் வாங்கல் சம்பந்தமாக எத்தனை நீதிமன்றத்தில் எத்தனை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. எந்த தேதியில் வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் நோட்டிஸ் அனுப்பினார் என்று எனக்கு தெரியாது. எந்த தேதியில் யாரால் புரோ நோட்டு நிரப்பப்பட்டது என்று எனக்கு தெரியும். செண்பகராஜ் என்பவரால் புரோ நோட்டு நிரப்பப்பட்டது. வாதி பிரதிவாதிக்கு புரோ நோட்டு கொடுக்கும் போது நிரப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல நிரப்பி தான் கொடுத்தார். செண்பகராஜ் என்பவரால் புரோ நோட்டு நிரப்பப்பட்டது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. செண்பகராஜ் என்பவரால் புரோ நோட்டு நிரப்பப்பட்டது என்றால் எந்த தேதியில் நிரப்பப்பட்டது என்று எனக்கு தெரியாது. வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பிலும் பிராதிலும் எந்த இடத்தில் வைத்து பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதி பிரதிவாதிக்கு பொன்னுசாமி வீட்டில் வைத்து பணம் கொடுத்தார். பொன்னுசாமி வீட்டில் வைத்து பணம் கொடுத்த விவரம் வழக்கறிஞர் அறிவிப்பிலும் பிராதிலும் எந்த இடத்திலும் குறிப்பிடபடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதியில் எங்கு வைத்து யார் யாரிடம் எவ்வளவு தொகை கொடுத்தார்

என்றால் வாதியின் வீட்டில் வைத்து பிரதிவாதிக்கு ரூ 3 இலட்சம் வாதியால் கொடுக்கப்பட்டது. அங்கு நான் இருந்த வகையில் எனக்கு ரூ 3 இலட்சம் கொடுக்கப்பட்டது எனக்கு தெரியும். வாதி பிரதிவாதியிடம் ரூ 3 இலட்சம் கொடுத்தார் நான் பணத்தை எண்ணி பார்க்கவில்லை. வாதிக்கு வயது 70 இருக்கும். வாதியால் எழுத படிக்க தெரியும். நல்ல முறையில் தான் உள்ளார். வாதி உடம்பு சரியில்லாமல் வீட்டில் இருந்து வருகிறார். பணம் கொடுத்த சமயத்தில் வாதி வேலை பார்த்தரா என்றால் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தார். வாதி பெரிய வருமானம் வரும் எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். வாதியின் மகன் எனக்கு நல்ல நண்பர். வாதியின் மகன் விவசாய வேலை பார்த்து வருகிறார். வாதியின் மகன் விவசாயம் செய்து வருகிறார். வாதியின் மகனுக்கு நான் விவசாய வேலை செய்வேன் என்றால் சரியல்ல. வீரசிகாமணியில் உள்ள அங்கப்பதேவரின் மகன் கன்னிமா தேவர் எனக்கு யார் என்று தெரியுமா என்றால் தெரியும். சொந்தக்காரர் இல்லை. வழக்கிற்காக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.